செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-71 நவம்பர், 2026


அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனை

இருதரப்பு ஒப்பந்த முறையின் வைர விழாவைக் கொண்டாடுவோம்

இருதரப்பு ஒப்பந்த முறையையும் கூட்டுபேர உரிமையையும் பாதுகாப்போம்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையான, வங்கித் துறையில் இருதரப்பு ஒப்பந்தம் (**BIPARTISM**) மற்றும் கூட்டுபேரப் பேச்சுவார்த்தை (**COLLECTIVE BARGAINING**) மூலம் கோரிக்கைகளுக்கு தீர்வுகாணும் முறை **1966**ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு தொடர்வதன் வைர விழாவினை நம் உறுப்பினர்கள் இவ்வாண்டில் பெருமிதத்துடன் அனுசரிக்கின்றனர்.

இக்கோரிக்கையினை அடைவதற்காக **1946**ஆம் ஆண்டில் போராட்டங்கள் துவங்கப்பெற்று, அதன் விளைவாக முதல் இருதரப்பு ஒப்பந்தம் **1966**ம் ஆண்டு கையெழுத்தானதின் வைர விழா ஆண்டினை அனுசரிக்க அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது. இச்சாதனையானது வங்கி ஊழியர் ஒற்றுமை, தியாகம் மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வலிமை ஆகியவற்றின் ஒரு வரலாற்றுச் சான்றாகும்.



COM PRABHATKAR, COM H L PARVANA, COM TARAKESWAR IN THE SASTRY TRIBUNAL

1966ஆம் ஆண்டு அக்டோபர் **19**ம் நாளன்று, இந்திய வங்கித் துறை ஒரு வரலாற்று மாற்றத்தைக் கண்டது. அன்றுதான் வங்கி ஊழியர்களுக்கும் வங்கி நிர்வாகங்களுக்கும் இடையே 'முதல் இருதரப்பு ஒப்பந்தம்' (**FIRST BIPARTITE SETTLEMENT**) கையெழுத்தானது.

இருதரப்பு ஒப்பந்தம் என்பது, ஊதியம் மற்றும் பணி நிலைமைகள் குறித்த ஒரு சாதாரண உடன்படிக்கை மட்டுமல்ல. இது, வங்கிப் பணியாளர்களின் பணி நிபந்தனைகள் என்பவை வங்கித் தொழிலாளர்களுக்கும் வங்கி நிர்வாகங்களுக்கும் இடையிலான கூட்டுப் பேரம் பேசுதல் மூலமே தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை நிலைநாட்டிய, ஒருங்கிணைந்த தொழிலாளி வர்க்கத்தின் ஒரு முக்கிய வெற்றியாகும். இச்சாதனை மூலம் வங்கித் துறையில் கூட்டுபேரம் பேசும் உரிமையையும், இருதரப்பு பேச்சுவார்த்தைக்கான உரிமையையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பெற்றுத் தந்தது.



FIRST BIPARTITE SIGNED ON 19-10-1966
COM V M CHITNIS CONGRATULATING COM H L PARVANA AND COM D P CHADDHA

அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இவ்வாண்டு **2026**ல் இருதரப்பு ஒப்பந்த முறையின் வைர விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், இதனை நாம் வெறும் நினைவுகூரலுடன் நின்றுவிடக் கூடாது. இச்சாதனையை அடைவதற்கு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பை அங்கீகரிக்கவும், வங்கி ஊழியர்களின் ஒன்றுபட்ட வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தவும், இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பலவீனப்படுத்த முயற்சிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் உறுதியுடன் எதிர்கொள்ளவும் இத்தருணம் நம்மை வலியுறுத்துகின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தோற்றம்:

வங்கி ஊழியர்களுக்கு விரோதமான நிர்வாகங்கள், வங்கிகளில் மோசமான பணிச் சூழல் மற்றும் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான உரிமையின் மீது கடுமையான கட்டுப்பாடுகள் இருந்த அந்தக் காலகட்டத்தில் அநீதிக்கு எதிரான ஒரு இயக்கமாக **1946**-இல் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உருவானது. ஊழியர்கள் தொழிற்சங்கங்களை துவக்குவதை வங்கி நிர்வாகங்கள் தீவிரமாக எதிர்த்தன. வங்கி நிர்வாகங்களின் அடக்குமுறைகளை மீறி சங்கங்களை அமைக்கத் துணிந்த ஊழியர்கள் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

வலிமைமிக்க வங்கி நிர்வாகங்களுடன் தனிப்பட்ட ஊழியர்களுக்கு சலுகைகள் குறித்து பேரம் பேசும் திறன் மிகக் குறைவாகவே இருந்தது. அவர்களின் குறைகள் எளிதில் புறக்கணிக்கப்பட்டு, கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. மேலும் ஊழியர்கள் ஒன்றிணைய மேற்கொண்ட முயற்சிகள் நசுக்கப்பட்டன. வங்கி ஊழியர்களை ஒரே கொடியின் கீழ் ஒன்றிணைப்பதன் மூலம் இந்தச் சூழலை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மாற்றியது. இது வங்கி ஊழியர்களுக்கு கூட்டு அடையாளத்தையும், பொதுவான தளத்தையும், அநீதியை எதிர்க்கும் தன்னம்பிக்கையையும் வழங்கியது.



AIBEA RALLY AT MUMBAI - 1978 - 3rd BIPARTITE AGITATION

இருப்பினும், தொடக்கக் காலங்கள் நீண்ட போராட்டங்களால் நிறைந்திருந்தன. வங்கி நிர்வாகங்கள் பேச்சுவார்த்தைக்கு மறுத்தபோது, ஊழியர்கள் தீர்ப்பாயங்கள் (**TRIBUNALS**) மூலம் நீதியைப் பெற வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர். 'சென் தீர்ப்பாயம்' **(SEN TRIBUNAL)**, 'சாஸ்திரி தீர்ப்பாயம்' **(SASTRY TRIBUNAL)** 'தொழிலாளர் மேல்முறையீட்டு தீர்ப்பாயம்' **(LABOUR APPELATE TRIBUNAL)** மற்றும் 'தேசாய் தீர்ப்பாயம்' **(DESAI TRIBUNAL)** ஆகியவை இந்த நீண்ட மற்றும் கடினமான போராட்ட வரலாற்றின் அங்கங்களாக மாறின.

1949 முதல் **1964** வரை, வங்கி ஊழியர்கள் பதினைந்து ஆண்டுகள் தீர்ப்பாயங்களைச் சார்ந்தே போராட வேண்டியிருந்தது. இத்தகைய அனுபவங்கள் எப்போதும் திருப்திகரமான முடிவுகளைத் தந்ததில்லை. 'சாஸ்திரி தீர்ப்பாயம்' **(SASTRY TRIBUNAL)** வங்கி ஊழியர்களின் ஊதியத்தைக் கூட குறைத்தது. இந்தக் கசப்பான அனுபவம், தொழிலாளர்கள், நிர்வாகங்களால் திணிக்கப்படும் முடிவுகளைச் சார்ந்திருக்கக் கூடாது, மாறாக, தங்கள் ஊதியம் மற்றும் பணி நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அங்கீகரிக்கப்பட்ட உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும் என்ற முக்கியமான பாடத்தை தொழிலாளர் இயக்கத்திற்கு கற்பித்தது.

வங்கித்துறையின் வரலாற்றை மாற்றிட எழுந்த முழக்கம் 1964:

1964ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற AIBEA-வின் 13வது மாநாட்டில், தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களான தோழர் பிரபாத்கர் மற்றும் தோழர் H L பர்வானா ஆகியோர், நம் இயக்கத்திற்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முழக்கத்தை வழங்கினர்: அது, "இனி தீர்ப்பாயங்கள் வேண்டாம்; இருதரப்பு ஒப்பந்தமே (BIPARTITE SETTLEMENT) வேண்டும்." என்பது. இது கூட்டு வலிமை மற்றும் ஜனநாயக ரீதியிலான பேச்சுவார்த்தையின் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.



COM PRABHATKAR AND IBA CHAIRMAN MR B V SONALKAR - 4th BIPARTITE SIGNED -1984

இந்தக் கோரிக்கை வெறும் ஊதிய உயர்வுக்கானது மட்டுமல்ல. மாறாக, இது தொழில்துறை உறவுகளில் கண்ணியம், அங்கீகாரம் மற்றும் சமத்துவத்திற்கான கோரிக்கையாக இருந்தது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் இந்த இலக்கை அடைய உறுதியுடன் செயல்பட்டது. வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்ததுடன், வங்கி நிர்வாகங்கள் மற்றும் பிற செல்வாக்கு மிக்க தரப்புகளிடமிருந்து வந்த எதிர்ப்புகளையும் எதிர்கொண்டது. இந்த போராட்டத்தின் உச்சகட்டமாக, 1966 அக்டோபர் 19 அன்று 'முதல் இருதரப்பு ஒப்பந்தம்' (FIRST BIPARTITE SETTLEMENT) கையெழுத்தானது.

வங்கித் துறையில் நாம் செயல்படுத்திய இம்முறையானது இந்தியாவில் தொழில்துறை அளவில் மேற்கொள்ளப்பட்ட முதல் இருதரப்பு ஒப்பந்தமாக அமைந்து ஒரு முன்னோடி சாதனையாக அமைந்தது. இந்த ஒப்பந்தம், வங்கித் துறையில் தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கும், பணி நிபந்தனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் ஒரு புதிய பாதையை உருவாக்கியது. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வெறும் ஒப்பந்தத்தை மட்டும் பெறவில்லை, வங்கித் துறையில் தொழில்துறை உறவுகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கக்கூடிய ஒரு கொள்கையை நிலைநாட்ட உதவியது.

பன்னிரண்டு இருதரப்பு ஒப்பந்தங்கள் - அறுபதாண்டு கால முன்னேற்றம்:

இந்த முதல் இருதரப்பு ஒப்பந்தம், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கும், வங்கி ஊழியர்களின் ஊதியம் மற்றும் பணி நிபந்தனைகளில் அடுத்தடுத்த முன்னேற்றங்களுக்கும் வழிவகுத்தது. **1966** முதல் இருதரப்பு ஊதியத் திருத்த ஒப்பந்தம் முதல், **2024** மார்ச் **8** அன்று கையெழுத்தான பன்னிரண்டாவது இருதரப்பு ஒப்பந்தம் வரை, இந்த பயணம் அறுபதாண்டு கால கூட்டுபேரம் பேசும் (**COLLECTIVE BARGAINING**) உரிமையின் வரலாற்றைக் கொண்டுள்ளது.




6th BIPARTITE SIGNED ON 14-02-1995. COM TARAKESHWAR, COM D P CHADA

பன்னிரண்டு தொடர்ச்சியான இருதரப்பு ஊதிய ஒப்பந்தங்களையும், அதனுடன் ஓய்வூதியம், கணினிமயமாக்கல், ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகள் மற்றும் பிற பணி சார்ந்த நிலைமைகள் குறித்த முக்கியமான ஒப்பந்தங்களையும் வங்கி ஊழியர்கள் பெற்றனர். இதில் குறிப்பிடத்தக்க மைல்கற்கள் சில:

- **1966**: முதல் இருதரப்பு ஒப்பந்தம், தொழில்துறை அளவிலான கூட்டுப் பேரம் பேசும் முறையை உருவாக்கியது.
- **1983**: கணினிமயமாக்கல் குறித்த ஒப்பந்தங்கள், வங்கித்துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப மாற்றங்களை எதிர்கொள்ள உதவின.
- **1993**: வரலாற்றுச் சிறப்புமிக்க ஓய்வூதிய ஒப்பந்தம், சமூகப் பாதுகாப்பிற்கான போராட்டத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.
- **2005** மற்றும் **2010**: ஓய்வூதியம் தொடர்பான ஒப்பந்தங்கள். பணியாளர் நலன்களுக்கான கட்டமைப்பை விரிவுபடுத்தின.
- **2020**: பதினோராவது இருதரப்பு ஒப்பந்தம் (**ELEVENTH BIPARTITE SETTLEMENT**), வங்கித்துறை தழுவிய பேச்சுவார்த்தை மரபைத் தொடர்ந்து முன்னெடுத்தது.
- **2024**: பன்னிரண்டாவது இருதரப்பு ஒப்பந்தம், இந்த வரலாற்றுச் செயல்பாட்டின் மிக அண்மைய மைல்கல்லாக அமைந்தது.

பன்னிரண்டு இருதரப்பு ஒப்பந்தங்கள் மற்றும் பிற ஒப்பந்தங்கள் அனைத்திலும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பங்கேற்று கையெழுத்திட்டது நாம் பெருமிதம் கொள்ளத்தக்க சாதனை ஆகும். இச்சாதனை தலைமுறைகள் பல கடந்தும், கூட்டுபேர உரிமையினை தக்கவைப்பதில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் வகிக்கும் முக்கியப் பங்கைப் பிரதிபலிக்கிறது.



7th BPS SIGNED ON 27-03-2000. COM TARAKESHWAR, COM N SAMPATH, COM C H VENKATACHALAM

குறைந்த ஊதியத்திலிருந்து மேம்பட்ட பணிச் சூழல் வரை:

இதுகாறும் இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் நாம் அடைந்துள்ள ஊதிய விகிதங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இருதரப்பு பேச்சுவார்த்தை முறையின் (**BIPARTISM**) சாதனைகள் தெளிவாகத் தெரிகின்றன. இதன்மூலம் நாம் பெற்றுள்ள பல்வேறு பிரிவுகளிலுள்ள ஊழியர்களுக்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச அடிப்படை ஊதிய விகிதங்கள் (தேக்கநிலை ஊதிய உயர்வுகள் உட்பட) பின்வருமாறு:

அறுபது ஆண்டுகளில் ஊழியர் ஊதிய விகிதங்களின் முன்னேற்றம்	முதல் இருதரப்பு ஒப்பந்தம் 1966	12வது இருதரப்பு ஒப்பந்தம் 2024
துணை நிலை ஊழியர்கள் (**SUB STAFF**)	ரூ 92 - 145	ரூ 19,500 – 52,610
எழுத்தர்கள் (**CLERICAL STAFF**)	ரூ 154 - 460	ரூ 24,050 – 93,960

கடந்த அறுபது ஆண்டு காலத்தில் முறையான ஊதிய விகிதங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் அளவை இவை காட்டுகின்றன. இந்த ஊதிய விகிதங்கள் வங்கி ஊழியர்களின் வாங்கும் திறன் அல்லது வாழ்க்கைச் செலவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரடியாக அளவிடவில்லை என்றாலும், இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியை உணர்த்துகின்றன.

இச்சாதனையின் பின்னால் பல தலைமுறை வங்கி ஊழியர்களின் கூட்டு முயற்சி, பல தலைமுறை வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுத்தது, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் தொடர்ந்து வங்கி நிர்வாகங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, தேவைப்படும்போது வேலைநிறுத்தங்களிலும் ஈடுபட்டது ஆகியவை உள்ளன.



11th BPS SIGNED ON 11-11-2020. COM RAJEN NAGAR, COM C H VENKATACHALAM

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இந்தச் சாதனைகள் நியாயமான ஊதியம் பெறுவதில் மட்டும் நின்றுவிடவில்லை. வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் பெற்றது, பணிவிதி முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், ஊழியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் வங்கித் துறையில் தொழில்நுட்ப மாற்றங்கள் குறித்த ஒப்பந்தங்கள் போன்றவை வங்கித் துறையின் கட்டமைப்பை வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றியுள்ளன.

உறுப்பினர்களின் ஒற்றுமையே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வலிமை:

எந்தவொரு வரலாற்றுச் சாதனையும் தலைவர்களின் பங்களிப்பால் மட்டுமே பெற்றவை அல்ல. தலைவர்களின் தொலைநோக்குப் பார்வை, தொழிலாளர்கள் அதனை ஏற்றுக்கொண்டு, ஒன்றிணைந்த போராட்டங்கள் மூலமாக பெற்றதை தொடர்ந்து பாதுகாக்கும் உறுதியுடன் இருக்கும்போதுதான் ஒரு உயிரோட்டமான சக்தியாக மாறுகிறது.

பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது எதிர்கொள்ளப்பட்ட தடைகள், அரசாங்கத்தின் ஊழியர் விரோதக் கொள்கைகள், அரசியல் உள்நோக்கம் கொண்ட எதிர்ப்பாளர்கள் மற்றும் நம்மிடையே உள்ள அதிருப்தியாளர்களின் தடைகளையும் முறியடிக்க உறுப்பினர்களின் ஒற்றுமையும், உறுதியான அர்ப்பணிப்புமே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பல்வேறு சாதனைகளைப் பெற்றிட உதவியது.

தலைவர்கள் கோரிக்கைகளை உருவாக்கலாம், பேச்சுவார்த்தைகளை நடத்தலாம், ஆனால், பேச்சுவார்த்தைகளுக்கு வலிமை சேர்ப்பது ஒன்றிணைந்த தொழிலாளர் சக்தியே ஆகும். ஒரு தொழிற்சங்கத்தின் நம்பகத்தன்மை என்பது அதன் உறுப்பினர்களின் நம்பிக்கை, பங்கேற்பு, ஒழுக்கம் மற்றும் போராட்டத்திற்கான தயார்நிலை ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது.

எனவே, இருதரப்பு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முறையின் சாதனை என்பது, அதற்கான வியூகத்தை வகுத்த தலைவர்கள், அதைச் செயல்படுத்த பேச்சுவார்த்தை நடத்திய தோழர்கள் மற்றும் வெற்றியைச் சாத்தியமாக்கிய எண்ணற்ற வங்கி ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் சமமாகச் சேரும்.



12th BPS SIGNED ON 08-03-2024. COM RAJEN NAGAR, COM C H VENKATACHALAM

இருதரப்பு ஒப்பந்த முறைக்கு சவால் - போராட்டம் இன்னும் முடியவில்லை:

வங்கித் துறையில் இருதரப்பு ஒப்பந்த முறை சாதித்ததன் வைர விழா, நம் தற்பெருமைக்கான ஒரு சந்தர்ப்பமாக மாறிவிடக்கூடாது. இன்றளவும் இருதரப்பு கூட்டுபேர பேச்சுவார்த்தை அமைப்பை நீர்த்துப்போகச் செய்யவும், பலவீனப்படுத்தவும் முயற்சிகள் தொடர்கின்றன. கூட்டு பேரம் பேசுதலுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அணுகு முறைக்கு உதாரணமாக, ஒருதலைப்பட்சமான செயல்திறன் சார்ந்த ஊக்கத்தொகை (**PLI**) திட்டம் வங்கி நிர்வாகங்களினால் திணிக்கப்பட்டது. ஆனால் வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்து போராடி ஒன்றிய அரசின் இந்த முயற்சியை முறியடித்தனர்.

பல்லாண்டு காலப் போராட்டத்தின் மூலம் கட்டமைக்கப்பட்ட இருதரப்பு ஒப்பந்த உரிமையினை பாதுகாக்க ஊழியர்களின் விழிப்புணர்வு மற்றும் போராடும் மனப்பான்மை ஆகியவை தேவை. இருதரப்பு ஒப்பந்த முறை என்பது ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான ஒரு செயல்முறை மட்டுமல்ல. அது தொழிலாளர்களின் கூட்டுக்குரலின் வெளிப்பாடாகும்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பெருமையும் - அடுத்த தலைமுறையின் கடமையும்:

ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு முன் வந்தவர்கள் வென்றெடுத்த சாதனைகளை அனுபவிக்கின்றது. ஆனால், எந்தவொரு தலைமுறையும் அந்தச் சாதனைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் தயாராக இல்லாவிட்டால், அவை நிரந்தரமானவை என்று உரிமை கோர முடியாத நிலைமை உருவாகும்.

இன்றைய இளம் வங்கி ஊழியர்களுக்கு, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாறு கற்பிப்பது என்னவென்றால், தனியொரு தொழிலாளியைவிட விட தொழிற்சங்க அமைப்பு வலிமையானது; பிரிந்து போராடுவதைவிட விட ஒற்றுமை அதிக செயல்திறன் மிக்கது; மற்றும் ஒன்றுபட்டு தொடரும் போராட்ட நடவடிக்கைகள் மூலம், ஒரு காலத்தில் மாற்றவே முடியாதவை என்று கருதப்பட்ட நிலைமைகளைக் கூட நம்மால் மாற்றியமைக்க முடியும்.



ALL INDIA CO-OP BANK EMPLOYEES FEDERATION CONFERENCE - CHENNAI 1993
COM TARAKESHWAR, COM N SAMPATH, COM C H VENKATACHALAM


தொழிற்சங்கத்தின் செயல்பாடு என்பது அவ்வப்போது ஊதிய உயர்வுக்காக போராடுவதுடன் நின்றுவிடாமல், ஊழியர்களின் கண்ணியம், சமூகப் பாதுகாப்பு, நியாயமான உரிமைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை முறியடித்து தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் கடமையினைக் கொண்டிருக்க வேண்டும்.

முன்னோடித் தலைவர்களை நினைவு கூர்வோம் - சாதனைகளைப் பாதுகாப்போம்:

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறுபது ஆண்டுகால இருதரப்பு ஒப்பந்தத்தைக் கொண்டாடும் இவ்வேளை, முதல் இருதரப்பு ஒப்பந்தத்தைக் பெற்றுத் தந்த தோழர் பிரபாத்கர், தோழர் **H L** பர்வானா மற்றும் அந்தத் தலைமுறை வங்கி ஊழியர்களுக்கு நம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் தருணமாக இருந்திட வேண்டும்.

அநீதியைத் ஏற்றுக்கொள்ளத் தொழிலாளர்கள் மறுக்கும்போதுதான் முன்னேற்றங்கள் சாத்தியமாகிறது என்பதை இத்தலைவர்கள் மற்றும் தோழர்களின் தியாகங்கள், நமக்குத் தொடர்ந்து நினைவூட்டுகிறது. பன்னிரண்டு தொடர்ச்சியான ஊதிய ஒப்பந்தங்கள் மற்றும் எண்ணற்ற பிற உடன்படிக்கைகள் வாயிலாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற தொழிற்சங்கத் தலைவர்கள், மற்றும் சாதாரண வங்கி ஊழியர்களின் தலைமுறைகளுக்கு நாம் நன்றி கூறுவது நம் கடமை ஆகும்.

இந்த வைர விழா ஆண்டு, இருதரப்பு பேச்சுவார்த்தை முறையின் (**BIPARTISM**) சாதனைகளைப் பாதுகாப்பதற்கும், அத்தகைய பேச்சுவார்த்தைகளைச் சிதைக்கும் எந்தவொரு முயற்சியையும் முறியடிப்பதற்கும், நம் சங்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும், வங்கி ஊழியர்களின் ஒற்றுமையைக் காப்பதற்கும் நம்முடைய உறுதியை மீண்டும் புதுப்பிப்பதற்குமானதாக அமைய வேண்டும். அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, போராட்டத்தின் மூலமே கூட்டுபேரம் பேசும் உரிமை (**COLLECTIVE BARGAINING**) வென்றெடுக்கப்பட்டது. இன்று, அந்த உரிமையினை பாதுகாப்பது வங்கி ஊழியர்களின் கூட்டுப் பொறுப்பாகும்.



VETERANS OF TNBEF WITH COM PRABHATKAR -1967 COM C S SUBRAMANYAM, COM N SAMPATH
COM K J JOSEPH, COM V RAMANI, COM DAWOOD, COM U P SHET, COM SHIVALINGAM, COM NARAHARI,

இருதரப்பு பேச்சுவார்த்தை மற்றும் கூட்டு பேரம் பேசும் உரிமை வென்றெடுக்கப்பட்டதன் **60** ஆண்டுகளைப் போற்றும் வகையிலும், இந்த உரிமையினைப் பெற்றுத்தந்த **AIBEA**-வின் பங்களிப்பைக் கொண்டாடும் வகையிலும், நமது அனைத்து இணைப்பு சங்கங்களும் **2026** அக்டோபர் **15** முதல் **2026** நவம்பர் **10** வரை உறுப்பினர் கூட்டங்களை ஏற்பாடு செய்யுமாறு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது.

வங்கி ஊழியர்களின் உரிமைகள், கண்ணியம் மற்றும் சமூக நீதிக்கான தொடர் போராட்டத்தில், இந்த வைர விழா ஆண்டு ஒரு புதிய தொடக்கமாக அமையட்டும். நமது ஒப்பற்ற தலைவர்களும், வங்கித் துறையில் இருதரப்பு ஒப்பந்த முறையினை வலியுறுத்தி, போராடி சாதித்த வங்கி ஊழியர்களின் தலைமுறையும் ஆற்றிய மறக்க முடியாத பங்களிப்பினை நாம் என்றென்றும் நினைவுகூர்வோம்.

IDBI வங்கியை தனியார்மயமாக்கி அந்நிய முதலீட்டாளர்களுக்கு தாரைவார்க்கும் ஒன்றிய அரசின் தேச விரோத முடிவை எதிர்த்து UFBU போராட்டம்

நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் 1964ம் ஆண்டு, மேம்பாட்டு நிதி நிறுவனமாக (DEVELOPMENT FINANCIAL INSTITUTION) உருவாக்கப்பட்ட IDBI வங்கி கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றியது. 2004-ல் இது வணிக வங்கியாக மாற்றப்பட்டபோது அரசு மற்றும் LIC வசம் IDBI வங்கியின் பெரும்பான்மை பங்குகள் இருந்தபோதிலும், 2019ம் ஆண்டு ஜனவரியில் இந்திய ரிசர்வ் வங்கி இதனை தனியார் துறை வங்கியாக வகைப்படுத்தியது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கைகள் IDBI வங்கி துவங்கியபோது அறிவிக்கப்பட்ட பொது நோக்கத்திலிருந்து படிப்படியாக விலகிச் சென்றதைக் காட்டுகிறது.



தற்போது அரசு மற்றும் LICயின் கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பான்மை பங்குகளை ஒரு வெளிநாட்டு முதலீட்டாளருக்கு மாற்றும் முயற்சியானது IDBI வங்கியின் பொதுத்துறைத் தன்மை மற்றும் சமூக நோக்கங்கள் மீதான நேரடித் தாக்குதலாகும். நாடெங்கிலும் 2,136 கிளைகளுடன் இரண்டு கோடி வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவை வழங்கி வரும் IDBI வங்கி பல்வேறு சவால்களைக் கடந்து, இன்று தொடர்ந்து கணிசமான லாபத்தை ஈட்டும் மிக வெற்றிகரமான வங்கியாகத் திகழ்கிறது.

தற்போது இந்த வங்கியில் பொதுமக்களின் வைப்புத்தொகை சுமார் ரூ 3,50,000 கோடியாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் வங்கி முறையே ரூ 5,600 கோடி, ரூ 7,500 கோடி மற்றும் ரூ 9,500 கோடி நிகர லாபத்தை ஈட்டியுள்ளது. இத்தகைய சிறப்பான செயல்பாட்டில் உள்ள ஒரு வங்கிதான் தற்போது அந்நிய நாட்டு நிதி நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படவுள்ளது. இது வெறும் தனியார்மயமாக்கல் மட்டுமல்ல, வெளிநாட்டுமயமாக்கலும் (FOREIGNISATION) ஆகும்.

IDBI வங்கியில் ஒன்றிய அரசு மற்றும் **LIC** வசம் உள்ள **60** சதவீத பங்குகளை, கனடாவைச் சேர்ந்த முதலீட்டு நிறுவனமான '::பேர்::பாக்ஸ் ::பைனான்சியல் ஹோல்டிங்ஸ்' **(FAIRFAX FINANCIAL HOLDINGS)** நிறுவனத்திற்கு விற்பனை செய்ய ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.



ஒன்றிய அரசின் இந்த முடிவு பொதுத்துறை வங்கி முறை மீதான ஒரு வெளிப்படையான தாக்குதல் மற்றும் பொது நலனுக்குச் செய்யப்படும் துரோகமாகும். இந்த தேச விரோத தனியார்மயமாக்கும் முடிவை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று **UFBU** வலியுறுத்தியுள்ளது.

IDBI வங்கியை வெளிநாட்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பது, **IDBI** வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் பணிப் பாதுகாப்பு, ஓய்வூதியப் பலன்கள் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் குறித்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. **IDBI** வங்கியை விற்பனை செய்யும் அரசின் முடிவுக்கு எதிராக, **2026** நவம்பர் **2** மற்றும் **3** ஆகிய தேதிகளில் அகில இந்திய அளவில் வேலைநிறுத்தப் போராட்டத்தை **IDBI** வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

வங்கிகளைத் தனியார்மயமாக்குவதையும், விற்பனை செய்வதையும் **UFBU** முழுமையாக தொடர்ந்து எதிர்த்து வருகின்றது. **IDBI** ஊழியர்களின் இப்போராட்டத்திற்கு, அனைத்து வங்கிகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தங்களுடைய முழு ஆதரவை வழங்குமாறும், நம் ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் **IDBI** வங்கி ஊழியர்களுடைய அனைத்துப் போராட்ட நிகழ்வுகளிலும் பங்கேற்குமாறும் **UFBU** தனது இணைப்பு சங்கங்களை கேட்டுக்கொண்டுள்ளது.

UFBU அமைப்பின் அனைத்து சங்கங்களும் உறுப்பினர்களும் பின்வரும் நிகழ்வுகளில் பங்கேற்றனர். **23-10-2026** அன்று மும்பையில் நடைபெற்ற போராட்டத்திலும், **25-10-2026** அன்று அனுசரித்த ட்விட்டர் **(Twitter/X)** பிரச்சாரத்திலும், **30-10-2026** அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணிகளிலும் **UFBU** பங்கேற்றது.

IDBI ஊழியர் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ள நாடு தழுவிய வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக **02-11-2026** அன்றைய தினம் அனைத்து வங்கிகளிலும் பணியாற்றும் **UFBU** அமைப்பினைச் சார்ந்த அனைவரும் கோரிக்கை அட்டை அணிந்து (**BADGE**) பணியாற்றிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.



தோழர்களே, **IDBI** வங்கியை அந்நிய நாட்டு நிதி நிறுவனத்திற்கு விற்பனை செய்வது தனியார்மயமாக்களின் ஒரு தொடக்கம் மட்டுமே. இந்த நடவடிக்கையினால் ஊழியர்களின் பணி நிலைமைகள், ஓய்வூதியம், வேலைப் பாதுகாப்பு, தொழிற்சங்க உரிமைகள் மற்றும் சமூக நீதிக் கொள்கைகள் ஆகியவற்றில் பெரும் பாதிப்புகள் ஏற்படும். பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயமாக்கும் அரசின் இத்தகைய முயற்சிகளை நாம் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

UFBU அமைப்பின் அனைத்து சங்கங்களும் உறுப்பினர்களும் **IDBI** வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளின் ஒன்றிணைந்த போராட்ட நடவடிக்கைகளுக்கும் வேலைநிறுத்தத்திற்கும் முழு ஆதரவை வழங்குமாறு **UFBU** அறைகூவல் விடுத்துள்ளது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

மாநிலம் முழுவதும் போராட்டக் களத்தில் மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி எழுச்சியுடன் தொடர்ந்த போராட்டம் வெற்றி

மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நிலுவையிலுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு காணக் கோரி தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் துவக்கியுள்ள போராட்ட நடவடிக்கைகளின் முதற்கட்டமாக **7.10.2026** அன்று நடைபெற்ற கோரிக்கை அட்டை அணிதல், **14.10.2026** அன்று நடைபெற்ற கூட்டு மனு சமர்ப்பித்தல் ஆகிய போராட்ட நிகழ்வுகள் ஊழியர்களின் பெரும் பங்கேற்பால் வெற்றிகரமாக முடிந்துள்ளது.

கூட்டு மனு சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் **4000** க்கும் மேற்பட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் பங்கேற்று கூட்டு மனுவில் கையொப்பமிட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து **21.10.2026** அன்று கூட்டுறவு வங்கி நிர்வாக அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை தீர்க்க வலியுறுத்தி வாட்ஸ்அப் மூலம் செய்தி அனுப்பும் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தோழர்கள் பங்கேற்றனர். அனைத்து மாவட்ட மையங்களிலும் **22.10.2026** அன்று நடைபெற்ற ஒருமித்த ஆர்ப்பாட்டத்திலும் நமது இணைப்பு சங்க நிர்வாகிகள் தலைமையில் தோழர்கள் பெருமளவு கலந்து கொண்டு நம் கோரிக்கைகளுக்கு வலு சேர்த்தனர்.

அனைத்து மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் நமது கோரிக்கைகள் பொதுவானவை ஆதலால், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் செயல்படும் மற்றைய தொழிற் சங்கங்களையும் ஒன்றிணைத்துப் போராடும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள நம் சங்கம் முடிவு செய்தது. ஊழியர்களுக்கு எதிரான பதிவாளரின் அணுகுமுறை அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும் அதல பாதாளத்தில் மீண்டும் தள்ளிவிடும் நடவடிக்கையே ஆகும்.



கடன் கொடு - வசூல் செய்யாதே - ஊழியர் ஊதியம் பிடித்திடு - அடாவடி நிர்வாகத்தின் அநியாயக் கோட்பாடு:

ஒருபுறம் கடன் மேளா, மறுபுறம் கொடுத்த கடனை வசூல் செய்ய கூடாது என்று தடையாணை. இறுதியில் வழங்கிய கடன் வசூல் ஆகவில்லை என்று பணியாளர்களின் ஓய்வு காலப் பயன்களை பிடித்தம் செய்வது என்று முரண்பாடுகளின் மொத்த உருவமாக உள்ள பதிவாளர் அலுவலக நடவடிக்கைகள் ஊழியர்களை பெரும் அச்சுறுத்தல்களுக்கு ஆட்படுத்தியுள்ளது.



எனவே இந்நிலை உடனடியாக மாற்றப்பட்டு, மாவட்ட வங்கிகள் அனைத்தும் காக்கப்பட வேண்டும். ஊழியர்களின் முக்கியப் பிரச்சினைகளான பணிநிலை திறன் 3:1 ஒதுக்கீடு, பொதுப்பணி முறை, ஊதிய உயர்வு உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும் போன்ற முக்கியக் கோரிக்கைகள் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.



27.10.2026 அன்று நடைபெற்ற மூன்று சுற்று பேச்சுவார்த்தையில் நமது கோரிக்கைகள் மீது திருப்திகரமான முன்னேற்றம்:

நம் போராட்டம் மாநிலமெங்கும் தீவிரமடைந்த நிலையில், நமது கோரிக்கைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழிவகை ஏற்படுத்துமாறு மாநில தலைமை கூட்டுறவு வங்கி நிர்வாக இயக்குநரை மாநிலப் பதிவாளர் பணித்திருந்தார்.



27-10-2026 அன்று காலை நடைபெற்ற பேச்சுவார்த்தையில் **TNSC** வங்கியின் பொதுமேலாளரும் பங்கேற்றார். சுமார் **75** நிமிடங்கள் நடைபெற்ற இந்த முதல் சுற்று பேச்சுவார்த்தையில் நமது ஒரு சில கோரிக்கைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை.



எனினும் பதிவாளர் அவர்கள், கூடுதல் பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்) அவர்களை தலைமை வங்கிக்கு சென்று பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அறிவுறுத்தி இருந்தார். அதைத் தொடர்ந்து அன்று மதியம் மூன்று அதிகாரிகள் குழுவிடம் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கி சுமார் **75** நிமிடங்கள் நடைபெற்றது.



இப்பேச்சுவார்த்தையில் கீழ்க்கண்ட முன்னேற்றங்கள் ஏற்பட்டன:

- பணிநிலைத்திறன் திருத்தி அமைத்தல்: **TNSC** வங்கி நிர்வாக இயக்குநர் தலைமையிலான இக்குழுவின் அறிக்கை ஒரு வார காலத்திற்குள் இறுதி செய்யப்பட்டு பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்படும்.
- **KCC-** கடன் வசூலுக்கான தடை ஆணை, தள்ளுபடி செய்வது குறித்து தமிழக அரசின் புதிய அரசாணை வெளியிடப்பட்டவுடன் விலக்கிக் கொள்ளப்படும்.

- பொதுப் பணி நிலை குறித்து தொழிற்சங்கங்களின் கருத்தையொட்டி குழுவின் அறிக்கையில் பரிந்துரைகள் இருக்கும்.
- **IBPS** மூலம் பணிநியமனம் என்கிற கோரிக்கை அரசின் கவனத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லப்படும்.
- கருணை ஓய்வூதியம் ரூ. **10,000** ஆக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கைக்கு சில மாதங்களுக்கு முன்னர் தான் நமது மாநில சங்கத்தின் கோரிக்கையை ஏற்று ரூ. **5500/-** லிருந்து ரூ. **6,500/-** ஆக உயர்த்தப்பட்டது என்றும், எனவே ரூ. **10,000** ஆக உயர்த்துவது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
- தற்போது பணியாற்றும் ஊழியர்களுக்கு **TNSC** வங்கியில் உள்ளது போல் பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் இதற்கான குழுவின் பரிந்துரைகளின்படி பரிசீலிக்கப்படும்.
- ஊதிய உயர்வு பேச்சுவார்த்தை குழு மாற்றியமைக்க வேண்டுமென்ற நமது கோரிக்கையின்படி ஊதிய நிர்ணயக்குழு மாற்றம் செய்யப்பட்டு, **TNSC** வங்கியின் மேலாண்மை இயக்குனர் மற்றும் அனைத்து தரப்பு வங்கிகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கி பதிவாளர் அவர்களால் **27.10.2026** அன்று ஆணை வழங்கப்பட்டுள்ளது**.**
- பள்ளி, கல்லூரி கல்விக் கட்டணச் சலுகை நீதிபதி குழுவின் பரிந்துரைப்படி ஒரே மாதிரியான அளவில் அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.
- மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் ஓய்வு பெற்ற தோழர்களின் ஓய்வுகாலப் பயன்கள் பிடித்தம் செய்துள்ளது குறித்த நமது கோரிக்கைக்கு ஒரு வங்கியை தவிர பதிவாளர் அலுவலகத்தில் எவ்வித முறையீடுகளும் இல்லை. அதன் விவரங்கள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
- ஊதிய முரண்பாடுகள் குறித்த குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதன் மீதான உரிய ஆணைகள் விரைந்து வெளியிடப்படும்.
- காஞ்சிபுரம், வேலூர், மற்றும் நீலகிரி மாவட்டங்களில் கருணைக்கொடை (**GRATUITY**) மீதான உச்சவரம்பு விதித்துள்ளது குறித்து அறிக்கை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.



இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட கூடுதல் பதிவாளர்,**TNSC** நிர்வாக இயக்குநர் இருவரும் பிரச்சனைகளை புரிந்து கொண்டு தீர்வு காண முயன்றிடினும், நமது முக்கிய கோரிக்கைகளான **3:1** ரத்து செய்வது மற்றும் **06-10-2026** சுற்றறிக்கையை விலக்கி கொள்வது குறித்து பதிவாளரின் கருத்தை அறிந்து நமக்கு தெரிவிப்பதாக கூறினர்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவு நமது மாநில சங்க நிர்வாகிகள் பதிவாளரை சந்தித்தனர். இச்சந்திப்பில், **TNSC** நிர்வாக இயக்குநர், கூடுதல் பதிவாளர் (**F&B**) ஆகியோரும் உடன் இருந்தனர். சுமார் **45** நிமிடங்கள் நடந்த இப்பேச்சுவார்த்தையில் பதிவாளர் அவர்கள் நமது கருத்துக்களை கேட்டுக்கொண்ட பின்னர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நிர்வாகங்கள் **3:1** ஒதுக்கீட்டிற்கு விலக்கு கேட்டு தீர்மானங்களை அனுப்பி வைக்கும் பட்சத்தில் ஒருமுறை நிகழ்வாக ஒதுக்கீட்டை விலக்கி கொள்வதாகவும், **06-10-2026** ஆணையின் மீது நமக்குள்ள ஆட்சேபணைகளை பரிசீலித்து தனது ஆணையை திருத்தி அமைப்பதாகவும் தெரிவித்தார்.



மேலும், தற்போது நாம் மேற்கொண்டுவரும் போராட்ட நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ள வேண்டுமென்றும் அறிவுறுத்தினார். நாம் முன்வைத்த பல்வேறு பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் நமது போராட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.

நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகள் காண நமது போராட்டங்களுக்கு உறுதுணையாக இருந்த நமது மாநில சங்க அனைத்து இணைப்பு சங்கங்களுக்கும், வீட்டுவசதி சங்க ஊழியர்கள் அசோசியேஷனுக்கும், ஆதரவு அளித்த **PACS** அனைத்து பணியாளர் சங்கத்திற்கும் (**TACBEA**), தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை அலுவலர்கள் சங்க நிர்வாகிகளுக்கும் நமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது முதற்கட்ட போராட்டத்தில் எழுச்சியுடன் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் நமது வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். இதுகாறும் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உறுதி அளிக்கப்பட்ட அனைத்து தீர்வுகளும் நடைமுறைப்படுத்துவதற்கு நமது மாநில சங்கம் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்



தியாகத்தின் திருவுருவம்
தோழர் H L பர்வானா
103 வது ஆண்டு பிறந்த தினம்
3-11-2026



AIBEA வின் கலங்கரை விளக்கம்
தோழர் பிரபாத்கார்
42 வது ஆண்டு நினைவு தினம்
27-11-2026



சம்மேளனத்தின் ஒளிவிளக்கு
தோழர்
C S சுப்ரமணியன்
44 வது ஆண்டு நினைவு தினம்
16-11-2026

வங்கி ஊழியர் இயக்கத்தின் வழிகாட்டி தோழர் சம்பத் நினைவு நாள் - 20-11-2026

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட அதே **1946**ம் ஆண்டில் தோழர் சம்பத் அவர்கள் சென்னையிலுள்ள பேங்க் ஆப் இந்தியாவில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். அன்றைய காலகட்டத்தில் வங்கியில் பணிபுரிந்த ஊழியர்களின் அவல நிலையினை எதிர்த்துப் போராடி உரிமைகளை மீட்டெடுக்க சங்க ரீதியாக ஊழியர்களை ஒன்றிணைப்பதே ஒரே வழி என்று தோழர் சம்பத் உணர்ந்தார்.

சம்மேளனத்தின் சுடரொளி
தோழர் **N** சம்பத்
12 வது ஆண்டு நினைவு தினம்
20-11-2026



சென்னையில் தான் பணிபுரிந்து வந்த பேங்க் ஆப் இந்தியாவில் **1951**ம் ஆண்டு ஊழியர்களை ஒன்றிணைத்து சங்கம் நிறுவினார் தோழர் சம்பத். அத்துடன் நில்லாது, பிற வங்கிகளில் பணிபுரிந்த ஊழியர்களையும் தொழிற்சங்கம் அமைத்திட வேண்டியதன் அவசியத்தினை உணர்த்தி பல்வேறு வங்கிகளில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கிளைகளைத் தோற்றுவித்தார்.

மேலும் தமிழகத்தில் செயல்பட்டுவந்த அனைத்து வங்கி ஊழியர் சங்கங்களையும் ஒன்றிணைத்து **1953**ம் வருடம் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் என்ற அமைப்பினை உருவாக்கினார் தோழர் சம்பத். அது முதற்கொண்டு, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கிய தோழர் சம்பத் அவர்கள், **1958**ம் வருடம் முதல் **1994**ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக தொடர்ந்து தேர்வு செய்யப்பெற்று சம்மேளனத்தின் ஒப்பற்ற தலைவராக உயர்வு பெற்றார்.

இளைஞர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாக உருவாகவேண்டும் என்ற உயர்வான நோக்கத்தில், **1994**ம் ஆண்டு தாமாகவே முன்வந்து பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார் தோழர் சம்பத். **1994**ல் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராகவும், பின்னர் **2010**ம் ஆண்டு அவைத் தலைவராகவும் பொறுப்பேற்று புகழ்மிக்க தலைவராக செயலாற்றினார் தோழர் சம்பத். நாடு முழுவதிலுமுள்ள பேங்க் ஆப் இந்தியாவில் செயல்பட்டுவந்த நம் சங்கங்களை ஒன்றிணைத்து அகில இந்திய சம்மேளனத்தினை தோற்றுவித்தார் தோழர் சம்பத்.

பேங்க் ஆப் இந்தியா வங்கியில் ஊழியர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய தோழர் சம்பத் அவர்கள், 1979ம் ஆண்டு முதல், அவர் தனது வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற 1986ம் ஆண்டு வரை பேங்க் ஆப் இந்தியாவின் நிர்வாகக் குழுவில் ஊழியர் பிரதிநிதியாக (WORKMEN DIRECTOR) திறம்பட செயல் புரிந்தார். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தில் ஆரம்பகாலம் தொட்டு தீவிரமாக தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றிய தோழர் சம்பத், 1954ல் சென்னையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஆறாவது அகில இந்திய மாநாட்டினை அனைவரும் வியக்கும் வண்ணம் நடத்திக் காட்டினார்.



1956ம் வருடம் கொல்கத்தாவில் நடைபெற்ற AIBEA வின் எட்டாவது மாநாட்டில் மத்தியக் குழு உறுப்பினராகவும், 1964ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மாநாட்டில் AIBEA வின் உதவிச் செயலாளராகவும், 1985ம் ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் செயலாளராகவும் பின்னர் 1996ல் கொல்கத்தாவில் நடந்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொன்விழா மாநாட்டில் அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர், 2001ம் ஆண்டு மும்பையில் நடைபெற்ற மாநாட்டில், இளைஞர்கள் தலைமைப் பொறுப்பேற்கவேண்டும் என்ற நோக்கில், தாமாகவே முன்வந்து தலைமைப் பொறுப்பிலிருந்து விலகி மத்திய குழு உறுப்பினராக செயல்புரிய முடிவெடுத்தார். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் வடிவமைத்து செயல்படுத்துவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்ட தோழர் சம்பத் அவர்கள், ஏழாவது இருதரப்பு ஒப்பந்தம் வரை அனைத்து ஒப்பந்தங்களின் வடிவாக்கத்திலும் அவற்றின் கணக்கீடுகளிலும் அளப்பரிய உதவிகளை ஆற்றியது என்றென்றும் நினைவு கூரத் தக்கதாகும்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் அனைத்துப் போராட்டங்கள், பிரச்சார இயக்கங்கள் மற்றும் சங்கத்தின் முக்கிய முடிவுகள் எடுப்பது மற்றும் ஆலோசனை வழங்குவது ஆகியவற்றில் தோழர் சம்பத் அவர்களின் பங்கு அளப்பரியதாகும். தமிழகத்திலிருந்த கூட்டுறவுத் துறை ஊழியர்கள் அனைவரையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கீழ் ஒன்றிணைத்து வலிமையான சங்கத்தினை கட்டமைத்தது தோழர் சம்பத் அவர்களுடைய சாதனையாகும். அகில இந்திய கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் முக்கிய ஆலோசகராகவும் அதனை வழி நடத்துபவராகவும் தோழர் சம்பத் திகழ்ந்தார்.

வங்கித்துறை ஊழியர்களுக்காக மட்டுமின்றி, சமுதாயத்தின் பிற அமைப்புகளில் பணியாற்றிய ஊழியர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்துப் போராடுவதில் முழுவதும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் தோழர் சம்பத். அறுபது வருடங்களுக்கும் மேலாக அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மற்றும் இந்திய பொதுவுடைமை இயக்கத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தொழிலாளர்களை சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அவர்களுடைய உரிமைகளுக்காக அல்லும் பகலும் பணியாற்றினார் தோழர் சம்பத்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முன்னோடித் தலைவர்கள் அனைவருடனும் சங்கப் பணிகளில் ஒன்றிணைந்து பணியாற்றிய முக்கியத் தலைவராக தோழர் சம்பத் விளங்கினார். தோழர் பிரபாத்கர் மறைவிற்குப் பின் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற தோழர் தாரகேசுவர் சக்ரவர்த்தி அவர்களுக்கு ஸ்தாபன நடவடிக்கைகள் பலவற்றுக்கும் ஆலோசனைகள் வழங்கி உறுதுணையாக விளங்கினார் தோழர் சம்பத் அவர்கள்.

சங்கத்தின் எந்தவொரு நிகழ்வும் நடவடிக்கையும் துல்லியமாகவும், அர்ப்பணிப்புடனும் அனைத்து உறுப்பினர்களின் ஒன்றுபட்ட ஈடுபாட்டுடனும் நடைபெற வேண்டும் என்ற குறிக்கோளில் எப்போதும் உறுதியாக இருப்பவர் தோழர் சம்பத். வங்கிகளில் புதிதாக இணைந்த இளம் தோழர்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி, அவர்களை சங்கத்தின் பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுத்து, சங்கத்தினை எப்போதும் துடிப்புடன் செயல்படுத்திட வேண்டும் என்ற உயர்வான நோக்கம் உடையவர் தோழர் சம்பத்.



வயது முதிர்ந்த காலத்தில்கூட அவர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு உபயோகிப்பது என்று உணர்ந்திட கணினி செயல்பாடு போன்றவற்றை கற்றுணர ஆர்வம் கொண்டவராக விளங்கினார். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் என்றென்றும் நேர்மையாகவும், கண்டிப்புடனும் செயலாற்றுபவராக இருந்த தோழர் சம்பத் அவர்களுடைய ஆலோசனைகளை, பிற துறைகளில் செயல் புரிந்து வந்த சங்கத் தலைவர்கள் மிகுந்த மதிப்பளித்து அவை மூலம் பயன்பெற்றனர்.

தோழர் சம்பத் அவர்களின், வங்கி ஊழியர் பணிவிதி முறைகள் பற்றிய முழுமையான அறிவாற்றல் மற்றும் தீர்க்கமான வாதங்களை இந்திய வங்கிகள் சங்க நிர்வாகிகள் பலமுறை பாராட்டி வியந்துள்ளனர். வங்கி ஊழியர்களின் பணிவிதி முறைகள் பற்றி தோழர் சம்பத் அவர்கள் தொகுத்து வெளியிட்ட **JOURNEY SO FAR** புத்தகம், பல பிரதிகள் அச்சிடப்பட்டு ஊழியர்களுக்கு மிகவும் உபயோகமாக இன்றளவும் விளங்குகின்றது.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்திற்கும், பிற சகோதர தொழிற்சங்க இயக்கங்களுக்கும் தோழர் சம்பத் ஆற்றிய அளப்பரிய சேவை காலந்தோறும் நினைவுகூறத் தக்கதாகும். தோழர் சம்பத் மறைந்த இந்நாளில், அவர் உருவாக்கிச் சென்ற பெருமைமிகு நமது சங்கத்தினை போற்றிப் பாதுகாப்பதுடன், அவருடைய உயரிய நோக்கமான ஊழியர்களிடையே பரந்துபட்ட ஒற்றுமையினைக் கட்டமைத்து, இளம் தோழர்களை பெருமளவில் சங்கப்பணிகளில் ஈடுபடுத்தி, அவர்களுக்கு சங்கப் பொறுப்புகளில் வாய்ப்பளித்து நம் ஸ்தாபனத்தினை மேலும் வலிமையாக்கிட உறுதி ஏற்போம்.

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF
NOVEMBER, DECEMBER 2026 & JANUARY 2027
FOR COMMERCIAL BANK EMPLOYEES

FOR SERVING EMPLOYEES – 31.33 % OF PAY
(INCREASE OF 3.50 %)

NO CHANGE IN DA RATES FOR PENSIONERS

வங்கி விடுமுறை நாட்கள் 2027 தமிழ்நாடு	 JAN 01 FRI ஆங்கிலப் புத்தாண்டு	 JAN 15 FRI பொங்கல்	 JAN 16 SAT திருவள்ளுவர் நாள்
 JAN 17 SUN உழவர் திருநாள்	 JAN 22 FRI தைப்பூசம்	 JAN 26 TUE குடியரசு தினம்	 MAR 10 WED ரம்ஜான்
 MAR 26 FRI புனித வெள்ளி	 APR 01 THU வங்கி ஆண்டுக் கணக்கு முடிவு	 APR 07 WED தெலுங்கு வருடப் பிறப்பு	 APR 14 WED தமிழ் வருடப் பிறப்பு அம்பேத்கர் ஜெயந்தி
 APR 19 MON மகாவீரர் ஜெயந்தி	 MAY 01 SAT மே தினம்	 MAY 17 MON பக்ரீத்	 JUN 15 TUE மொகரம்
 AUG 15 SUN சுதந்திர தினம் மிலாது நபி	 AUG 25 WED கிருஷ்ணஜெயந்தி	 SEP 04 SAT விநாயகர்சதுர்த்தி	 OCT 02 SAT காந்தி ஜெயந்தி
 OCT 08 FRI ஆயுத பூஜை	 OCT 09 SAT விஜய தசமி	 OCT 28 THU தீபாவளி	 DEC 25 SAT கிறிஸ்துமஸ்

அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்